

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2025) புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர்கள் எஸ். இரகுபதி, கே.ஆர். பெரியகருப்பன், எஸ்.எஸ். சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, துரை வைகோ, கே.நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, தி.ராமச்சந்திரன், எம்.சின்னதுரை, பிரபாகரன், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2025) புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு, அமைச்சர்கள் எஸ். இரகுபதி, கே.ஆர். பெரியகருப்பன், எஸ்.எஸ். சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ. ராசா, துரை வைகோ, கே.நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, தி.ராமச்சந்திரன், எம்.சின்னதுரை, பிரபாகரன், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.11.2025) திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகையில், இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் கட்சி தலைவரும், கண்டி நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அவர்கள் சந்தித்துப் பேசினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2025) புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கழக ஆட்சியில்

# கரூர் மாவட்டத்தில் ரூ.4750 கோடி வளர்ச்சி திட்டப் பணிகள்!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேச்சு!


கரூர், நவ. 12 -

கழக ஆட்சியில், கரூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ரூ.4750 கோடி நிதி வழங்கி வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருவதாக சட்டமன்ற உறுப்பினர் விசெந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாவட்ட Confederation of Indian Industry (CII), Young Indians, Indian women network, கரூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் மற்றும் 85 வணிக சங்கங்கள் இணைந்து 2030 ஆண்டுக்குள், கரூர் மாவட்டத்தின் அனைத்து தொழில்களின் வணிக இலக்கு ரூபாய் 50,000 கோடியை அடைந்திடும் வகையில், ‘KARUR VISION 2030 வளரும் கரூர்’ என்ற இலக்கை நோக்கிய நகர்வுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து சங்கங்கள் இணைந்து தொழில் மேம்பாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி, கரூர் அட்லஸ் அரங்கத்தில் துவக்கி வைத்து, தொழில் முனைவோர்களுக்கு பாராட்டு தெரிவித்து பரிசுகள் வழங்கினார். கருத்தரங்கில் வி. செந்தில் பாலாஜி பேசியதாவது:

சுதந்திரம் பெற்று இதுவரை எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு கடந்த நான்கரை ஆண்டுகளில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏராளமான திட்டங்களை கரூர் மாவட்டத்திற்கு வழங்கி உள்ளார்கள். ரூ.4750 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றது. அடிப்படைக் கட்டமைப்பு பணிகளுக்கு மட்டும் ரூ. 4,348 கோடி நிதியை வழங்கி உள்ளார்கள்.

கரூர் மாநகராட்சியாக தரம் உயர்த்தி, சாலை பணிகளுக்கு மட்டும் ரூ. 348 கோடி, பாதாள சாக்கடை, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளுக்கு ரூ.1067 கோடி, குளித்தலை, பள்ளப்பட்டி, புகழூர் ஆகிய நகராட்சிகளுக்கு, ரூ 203 கோடி, 8 பேரூராட்சிகளுக்கு ரூ 214 கோடி, 157 ஊராட்சிகளுக்கு ரூ. 1323 கோடி ஒப்புதல் வழங்கி பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநில நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.916 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.



கரூர் கோவை சாலை கரூர் மாவட்ட பகுதிகளில் ரூ.134 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தப்பட்டுள்ளது. நெரூர் உன்னியூர் இடையே காவிரி உயர் மட்ட பாலம் பணிகள் நிறைவு பெற்று விரைவில் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைப்பார்கள்.

ஆட்சி அமைந்த உடனேயே கரூரில் அரசு வேளாண்மை கல்லூரிக்கு அனுமதி கொடுத்தார்கள். இப்போது ரூ. 70 கோடி மதிப்பீட்டில் 40 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. சொந்த கட்டித்தில் விரைவில் இயங்கும். கரூர் மக்களின் கனவான புதிய பேருந்து நிலையம் திருமாநிலையூரில் கட்டுவதற்கு ரூ.40 கோடி நிதி வழங்கி துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுங்ககேட் முதல் வெங்கக்கல்பட்டி வரையிலும், திருமாநிலையூர் முதல் சுக்காலியூர் வரையிலும், கரூர் முதல் ஈரோடு வரையிலும் நெடுஞ்சாலைத்துறை சார்பில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது கரூர் தாந்தோணிமலையில் பணிபுரியும் மகளிருக்காக தோழி தங்கும் விடுதி கட்டப்பட்டு வருகிறது. கரூர் காமராஜ் காய்கறி மார்க்கெட் புதிய வணிக வளாகம், வெங்கமேட்டில் மீன் அங்காடி கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன. புதிய சிப்காட் 250 ஏக்கரில் அமைய இருக்கிறது. மினி ஐ.டி. பார்க் இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. அது கன்வென்ஷன் சென்டர், டெஸ்ட் லேப் உடன் அமைக்கப்படும். அரவக்குறிச்சி தொகுதியை பொறுத்தவரையில், அனைத்து அரசியல்வாதிகளும் கொடுக்கின்ற வாக்குறுதியாக முருங்கை பார்க் இருந்து வந்தது. அதை செயல்பாட்டிற்கு கொண்டுவந்தது நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான். 6.50 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்து முருங்கை பார்க் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒன்பது மினி டெக்ஸ்டைல் பார்க் அமைக்கப்பட்டுள்ளன. ஜவுளி அல்லாத தொழில்களையும் மேம்படுத்த அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது விரைவில் இலக்கை அடைவோம் அரசின் சார்பில் என்னென்ன தேவை என்பதை தெரிவிக்கும் போது அதற்கான நிதியை பெற்று தருவது எனது கடமை.

### திட்டங்களை தடுக்கும் அ.தி.மு.க.வினர்

பொதுவாக ஆட்சிப் பொறுப்புக்கு வரும்போது புதிய புதிய திட்டங்களை கொண்டு வருவது வழக்கம். ஆனால் கரூர் மாவட்டத்தில் திட்டங்களை தடுப்பதே வேலை என அதிமுகவினர் செயல்படுகின்றனர். தாங்கள் எதுவும் செய்யாமல் செய்பவர்களுக்கு முட்டுக்கட்டை போட்டு தடுக்கின்றனர். இதனால் மக்களுக்கு கிடைக்க வேண்டிய திட்டங்கள் கிடைக்காமல் போவதோடு திட்ட மதிப்பீடும் அதிகரித்து நிதிச் சுமை ஏற்படுகிறது. 29 கிலோமீட்டர் ரூ.77 கோடி மதிப்பீட்டில் சுற்றுவட்ட சாலை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றவில்லை. நாம் நிறைவேற்றும் போது வழக்கு போட்டனர். இப்போது திட்ட மதிப்பீடானது ரூ. 370 கோடியாக உயர்ந்து விட்டது.

கரூர் புதிய பேருந்து நிலையத்தை அமைக்க விடாமல் தடுப்பதற்காக வழக்கு போட்டனர். உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் மீண்டும் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் என மூன்று முறை சிறந்த வழக்கறிஞர்களை வைத்து வாதாடி வெற்றி பெற்று திறக்கப்பட்டுள்ளது. கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் ரூ. 6.30 கோடி மதிப்பீட்டில் போட்டி தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்காக உயர்தர நூலகம் கட்டுகின்ற பணியை தொடங்கினோம். அதையும் கட்ட விடாமல் கோர்ட்டுக்குச் சென்றனர். அங்கு வாதாடி உத்தரவு பெற்று தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

ஈரோடு சாலை குட்டகடை முதல் மண்மங்கலம் வரை சுற்றுவட்ட சாலை அமைக்க ரூ.200 கோடி மதிப்பீடு செய்து, ரூ. 72 கோடி நிதியை முதலமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார்கள். மேட் இன் கரூர் என்கிற நிலையை உருவாக்க வேண்டும். 3வது தலைமுறையினர் தொழில் வளர்ச்சியை முன்னெடுத்துள்ளனர். அரசு அவர்களுக்கு துணை நிற்கும். எனது 50 ஆண்டு காலத்தில் பொது வாழ்வில் 30 ஆண்டுகாலம் பணியாற்றி வருகிறேன். திராவிட மாடல் தொடரும். தமிழ்நாடு வெல்லும். கரூர் மாவட்டம் வளரும். மேற்கு மண்டலத்தில் வளர்ச்சி பெற்ற மாவட்டமாக கரூர் மாவட்டத்தை உருவாக்குவோம். இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர் மாவட்ட ஆட்சியர் தங்கவேல், சிலை. மாவட்ட தலைவர் பிரபு, துணை தலைவர் பெருமாள், செயலாளர் பவித்ரன், முன்னாள் தலைவர் பாலசுப்பிரமணியம், கோபாலகிருஷ்ணன், அட்லஸ் நாச்சிமுத்து, ஆசியன் வெங்கடாசலம், விஎன்சி. பாஸ்கர் உள்ளிட்ட தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு – காஞ்சிபுரம், வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட

# மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள்- மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கூட்டம்!

## துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!



சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் – சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் – தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் - மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப் பாளர்கள் (DLC) கலந்துரையாடல் கூட்டம் நாளை (13.11.2025-வியாழக்கிழமை) காலை 11.30 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஓட்டல் அகார்டில் நடைபெறும். இக்கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. கலந்து கொள்ள உள்ளார்.

அதுபோது மேற்குறிப்பிட்ட அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள் : கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 09.11.2025 அன்று நடைபெற்ற காணொலிக் காட்சி கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கணக்கீட்டு படிவம் (Enumeration Form) மீதான பணிகளை முழுமையாக முடிப்பது குறித்து!

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
09.11.2025

**ஆ.இராசா எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.



ஈரோடு மாவட்டம் திருநகர் காலனி மாநகராட்சி நடுநிலை பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளி கட்டிடத்தினை வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி திறந்து வைத்தார். மேலும் மரப்பாலம் கே.எஸ். நகரில் நியாய விலைக் கடையினை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வி. செல்வராஜ், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ. செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் ப.க.பழனிசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.